மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொடுக்கப்படவில்லை என்று இப்பொழுது நான் சொல்லவில்லை. விவரக் குறிப்புகள் இல்லை என்று தான் சொன்னேன். ஒரு குறிப்பிட்ட அடி உயரத்திற்குக் கீழே உள்ளவர்களுக்குக் குளிர் காலப் படி இல்லை என்றும், அந்த உயரத்திற்கு மேலே உள்ளவர்களுக்குக் குளிர் காலப் படி உண்டு. ஆனால் அது சம்பந்தமான கணக்கு விவரங்கள் தற்பொழுது என்னிடத்தில் இல்லை. குளிர் காலப்படி எந்த இடங்களுக்கு வருகிறது, எந்த அளவிற்கு வருகிறது, எத்தனை மாதங்களுக்குத் தருகிறோம் என்பதற்கெல்லாம் தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசால் கொள்முதல் செய்யப்படும் அரிசி

(157—*வினா 21032)—திரு. சி. கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் தற்போது வசூலிக்கப்பட்டு வரும் ''லெவி'' அளவை அதிகமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தற்போது வர்த்தகர் மீது அதிக பட்சமாக 50 சதவீதம் லெவி விதிக்கலாம் என்றிருப்பதை 75 சதவீதமாக ஆக உயர்த்தலாமா என்று அரசு ஆய்வு செய்கிறது.

(ஆ) அது பற்றி இறுதியான முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.